பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 03 2026 friday - 6 45 am

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ஈரான் அதிபர் திரு மசூத் பெஷஸ்கியானுடன் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தினார்.

2. பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின் 22-வது தவணைத் தொகை இன்று விடுவிக்கப்படவுள்ளது.

3. தமிழகத்தில் கடந்த 11 ஆண்டுகளில் 55 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. தமிழகத்தில் விமானப் போக்குவரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

5. உலக பாரா சேலஞ்சர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Bhavinaben Patel பட்டம் வென்றார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஈரான் அதிபர் திரு மசூத் பெஷஸ்கியானுடன் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தினார்.

மேற்கு ஆசியாவில் நிலவும் சூழல் குறித்து ஈரான் அதிபருடன் ஆலோசனை நடத்தியதாக சமூக வலைதளத்தில் பிரதமர் கூறியுள்ளார்.

பொதுமக்களின் உயிர் இழப்பு மற்றும் உள்கட்டமைப்புக்கு ஏற்படும் சேதம் குறித்து ஈரான் அதிபரிடம் கவலையை வெளிப்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு, கச்சா எண்ணெயை தடையின்றி கொண்டு வருவது குறித்து திரு மசூத் பெஷஸ்கியானுடன் பேச்சு நடத்தியதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த இந்தியா ஆதரவு அளிக்கும் என்று அவரிடம் உறுதியளித்ததாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தில்லியில் நேற்று ஊடக நிறுவனம் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய பிரதமர், எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாக கூறினார்.

உலகளாவிய சூழலால் ஏற்பட்டுள்ள சிக்கலை எதிர்கொள்ள அரசு தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்

>>>>>><<<<<<

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின் 22-வது தவணைத் தொகை இன்று விடுவிக்கப்படவுள்ளது.

குவஹாத்தியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி இந்தத் தொகையை விடுவிக்கவுள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இன்றைய நிகழ்ச்சியில் 18 ஆயிரத்து 640 கோடி ரூபாய் விடுவிக்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் நாடு முழுவதும் 9 கோடியே 32 லட்சம் விவசாயிகள் பயன் அடைவார்கள் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்தில் கடந்த 11 ஆண்டுகளில் 55 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், கடந்த 11 ஆண்டுகளில் தமிழகத்தில் 2 ஆயிரத்து 800 கிலோ மீட்டர் தொலைவிலான பணிகள் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் விரைவில் நிறைவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

திண்டுக்கல் - நத்தம் இடையிலான சாலைப் பணிகள் நவம்பர் மாதத்திலும், காரைக்குடி - திருப்பதூர் இடையிலான சாலைப் பணிகள் வரும் ஜூலை மாதத்திலும் நிறைவடையும் என்று அவர் தெரிவித்தார்.

தாம்பரம் - திண்டிவனம் இடையிலான டிஜிட்டல் நெடுஞ்சாலைப் பணிகள் அடுத்த மாதத்திற்குள் நிறைவடையும் என்றும் திரு நிதின் கட்கரி கூறினார்

>>>>>><<<<<<

தமிழகத்தில் விமானப் போக்குவரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், நாடு முழுவதும் உடான் திட்டத்தின் கீழ் 663 வழித்தடங்கள் உள்ளதாகவும் தமிழகத்தில் 26 வழித்தடங்கள் செயல்பாட்டில் உள்ளதாகவும் கூறினார்.

மாநிலத்தில் சேலம், வேலூர், நெய்வேலி, தஞ்சை ஆகிய நான்கு விமான நிலையங்கள் உடான் திட்டத்தில் அடையாளம் காணப்பட்டு அதில் சேலம் விமான நிலையம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வேலூர் மற்றும் நெய்வேலியைப் பொறுத்தவரை உரிம நடைமுறைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தஞ்சை விமான நிலையத்திற்கான அணுகுச் சாலைக்கு மாநில அரசால் நிலம் இன்னும் வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இது தவிர திருச்சி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சென்னை, மதுரை விமான நிலையங்களில் நவீனமயமாக்கல் பணிகளும் உள்கட்டமைப்பு விரிவாக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு ராம் மோகன் நாயுடு கூறினார்

>>>>>><<<<<<

தமிழகத்தில் ஊரக பகுதிகளில் உள்ள 89 சதவீத வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஜல்சக்தித் துறை அமைச்சர் திரு சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அவர், ஜல்ஜீவன் இயக்கம் தொடங்கப்படுவதற்கு முன்பு, 17 சதவீத கிராமப் புற வீடுகளில் மட்டுமே குடிநீர் இணைப்பு இருந்ததாக தெரிவித்தார்.

மாநிலத்தில் காஞ்சிபுரம், கோவை உள்ளிட்ட 15 மாவட்டங்களில் உள்ள கிராமப்புறங்களில், 100 சதவீத வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக திரு சி.ஆர். பாட்டீல் தெரிவித்தார்

>>>>>><<<<<<

குலசேகரப்பட்டினம் ராக்கெட் ஏவுதளப் பணிகள் அடுத்த ஆண்டுக்குள் நிறைவடையும் என்று விண்வெளித் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், இதன் ஒட்டுமொத்த செலவு 985 கோடி ரூபாய் என்றும், இதுவரை 511 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்த தளம் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தவுடன், இதிலிருந்து ஆண்டுதோறும் 20 முதல் 25 சிறிய ராக்கெட்டுகள் விண்ணில் செலுத்தப்படும் என்று திரு ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்

>>>>>><<<<<<

பிரதமரின் முத்ரா வங்கிக் கடன் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் கடந்த நிதியாண்டில் 31 லட்சம் பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சிறு, குறு, நடுத்தர தொழில்கள் துறை இணையமைச்சர் செல்வி ஷோபா கரந்த்லாஜே தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், கடந்த நிதி ஆண்டில் மாநிலத்தில் 42 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இத்திட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான பயனாளிகள் உள்ள முதல் மூன்று மாநிலங்களில் தமிழகம் இடம்பெற்றுள்ளதாகவும் செல்வி ஷோபா கரந்த்லாஜே தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கலாச்சாரமும் பாரம்பரியமும் வேரூன்றிய மாநிலம் தமிழகம் என்று பொறுப்பு ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

சென்னை மயிலாப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக ஆளுநராகப் பணியாற்றுவதில் தாம் பெருமை கொள்வதாக தெரிவித்தார்.

கலாச்சாரமும் பாரம்பரியமும் தமிழகத்தில் போற்றிப் பாதுகாக்கப்படுவதாகவும், இது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் நாட்டின் வளர்ச்சி குறித்த செய்திகள் கடைக்கோடி மக்களையும் சென்றடைவதை செய்தியாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென்மண்டல தலைமை இயக்குநர் திரு. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம் சார்பில், விழுப்புரத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான பயிலரங்கில் பேசிய அவர், டிஜிட்டல் யுகத்தில் செய்திகள் வேகமாகப் பரவுவதாகவும், செய்தியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திய பின்னரே மக்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

போலி செய்திகள் சமூக அமைதிக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும், அதைத் தடுக்க ஊடகவியலாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் திரு பழனிச்சாமி கேட்டுக் கொண்டார்

**>>>>>><<<<<<**

இருவரிச் செய்திகள்

எத்தியோப்பியாவில் கனமழை மற்றும் நிலச்சரிவால் 50 பேர் உயிரிழந்தனர்.

**>>>>>><<<<<<**

புதுதில்லியில் நடைபெற்று வரும் பழங்குடியினர் கலை விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் திரு. ஜுவல் ஓரம் மற்றும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் இன்று பங்கேற்கின்றனர்.

**>>>>>><<<<<<**

ஹரித்வாரில் உள்ள பாரத மிகு மின் நிறுவனத்தில் புதிய உள்கட்டமைப்பு வசதிகளை மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு ஹெச்.டி. குமாரசாமி தொடங்கி வைத்தார்.

**>>>>>><<<<<<**

சாலையோர வியாபாரிகளுக்கான கடன் உதவித் திட்டத்தின் கீழ் இதுவரை 73 லட்சம் பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு டோக்கன் சாஹூ கூறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

நாட்டின் 99 புள்ளி 9 சதவீத பகுதிகளில் 5-ஜி மொபைல் சேவைகள் கிடைப்பதாக மத்திய தொலைத் தொடர்புத் துறை இணையமைச்சர் திரு பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

தேனியில் 65 கோடி ரூபாய் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங் பயனாளிகளுக்கு வழங்கினார்.

**>>>>>><<<<<<**

நாகை மாவட்டத்தில் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகளின் ஒரு பகுதியாக அனைத்து சோதனை சாவடிகளிலும் துணை ராணுவத்துடன் இணைந்து காவல்துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

**>>>>>><<<<<<**

வேளச்சேரி - பரங்கிமலை இடையே நீட்டிக்கப்பட்ட பறக்கும் ரயில்சேவை நாளை முதல் தொடங்கவுள்ளதாக சென்னை ரயில்வே கோட்டம் அறிவித்துள்ளது.

**>>>>>><<<<<<**

விளையாட்டுச் செய்திகள்

உலக பாரா சேலஞ்சர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Bhavinaben Patel பட்டம் வென்றார்.

போலந்தில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 11-6, 11-5, 11-9 என்ற செட்கணக்கில் ஃபிரான்ஸின் Flora Vautier-ஐ வென்றார்.

**>>>>>><<<<<<**

சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-15, 15-21, 28-26 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Okamura – Yamashita இணையை வென்றது.

**>>>>>><<<<<<**

உலக பாரா கிராண்ட்ஃப்ரீ தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Sumit Antil தங்கப்பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா நேற்று மட்டும் 12 தங்கப்பதக்கங்களை வென்றது.

**>>>>>>end<<<<<<**